**நிகழும் திருவள்ளுவராண்டு விகாரி வருடம் 2020-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி மாசி மாதம் 30-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

பொருள் : 1

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சியர், கோவை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் ஆகியோர்களின் உத்திரவின்படியும் கொரோனா வைரஸ் (Covid -19) நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தகவல் சுவரொட்டிகள் ஒட்டுதல், துண்டு பிரசுரம் வழங்குதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இந்நகராசிக்குட்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி பொருள்களை தெளித்தல், கையுறை, மாஸ்க், தற்காப்பு கவசம் போன்ற நோய் தடுப்பு பொருள்களை விநியோகம் பெறுதல், ஆட்டோவில் விளம்பரம் செய்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மேற்படி உயர் அதிகாரிகளின் மூலம் அவ்வப்போது பெறப்படும் உத்திவிற்கிணங்க உரிய நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ.45.00 (ரூபாய். நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும் இச்செலவினத்தினை இவ்வலுவலக பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 107 அனுமதிக்கப்பட்டது.**